## 28.41 உயர்மட்டக் குழுவின் பரிந்துரைகள் – கதர் கிராம மற்றும் குடிசை தொழில் திட்டங்கள் குறித்த பரிந்துரைகள் மீதான அரசின் ஆணைகள்

கைத்தறி,கைவினைப் பொருட்கள் துணி நூல் (ம) கதர் (எப்–2) துறை

அரசாணை (நிலை) எண். 107 நாள் : 7.6.1999

படிக்க :

செயலாளர் ஊரக வளர்ச்சித் துறை நேர்முக கடித எண்.14532/சி4/99 நாள் 11.5.99.

**ஆணை**

மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளுக்கு மேலும் உரிமைகள் பொறுப்புகள் மற்றும் அதிகாரங்கள் வழங்க பரிந்துரை செய்ய உயர்மட்டக்குழு ஒன்று தமிழக அரசால் அமைக்கப்பட்டது. தற்போது கதர் கிராம குடிசைத் தொழில் திட்டங்களை செயல்படுத்திட வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் மற்றும் பொறுப்புகளை இக்குழு ஆராய்ந்து மேலும் வழங்க வேண்டிய அதிகாரங்கள் குறித்து சில பரிந்துரைகளை செய்துள்ளது. இது தொடர்பாக கதர் வாரியம் கலந்தாலோசிக்கப்பட்டு இத்துறையை பொறுத்தவரை மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளுக்கு வழங்கப்பட வேண்டும் என்ற அதிகாரங்கள் தொடர்பாக குழுவின் அனைத்துப் பரிந்துரைகளும் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளன.

2. கதர் கிராம மற்றும் குடிசைத் தொழில் திட்டங்களில் கிராம ஊராட்சிகளுக்கு 9 பரிந்துரைகளும் ஊராட்சி ஒன்றியங்களுக்கு 10 பரிந்துரைகளும் மாவட்ட ஊராட்சிகளுக்கு 5 பரிந்துரைகளையும் கைத்தறி, கைவினைப் பொருட்கள் துணி நூல் (மற்றும்) கதர் துறை ஏற்கலாம் என்று உயர்மட்டக்குழு தெரிவித்துள்ளது. அதன் மீது 4.5.99 அன்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டு அனைத்து பரிந்துரைகளையும் ஏற்றுக் கொள்ளலாம் என்று முடிவெடுக்கப்பட்டது.

3. எனவே கதர் கிராம மற்றும் குடிசைத் தொழில் திட்டங்களை செயல்படுத்திட மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளுக்கு கூடுதல் அதிகாரம் வழங்குவது குறித்து உயர்நிலைக்குழுவின் பரிந்துரைகளின்படி கீழ்க்காணும் அதிகாரங்களை ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்களுக்கு வழங்கி அரசு ஆணை வெளியிடுகிறது.

### கதர் கிராம மற்றும் குடிசை தொழில் திட்டங்கள்

### கிராம ஊராட்சிகள்

164. கதர், கிராம மற்றும் குடிசைத் தொழில் திட்டங்களுக்கு தகுதியான பயனாளிகளை தேர்வு செய்து முறையான பயிற்சி நிறுவனங்கள் உள்ள இடங்கள் பற்றி தகவல் பயனாளிகளுக்கு தெரிவித்து தொழில் நுட்பம் மற்றும் செயல்திறன் பற்றி பயிற்சி அளிக்க ஊராட்சி நடவடிக்கை எடுக்கலாம்.

165. கிராம ஊராட்சி அளவில் விற்பனை நிலையங்கள் ஏற்படுத்த கிராம ஊராட்சி உதவிட வேண்டும். உள்ளூரிலேயே கிடைக்கக்கூடிய மூலப் பொருட்களை கொண்டு தொழில் துவங்க ஏற்பாடு செய்தல், உள்ளூரில் தயாரிக்கப்பட்ட பொருட்களின் விலையையும் ஊராட்சியே நிர்ணயம் செய்யலாம்.

166. ஊராட்சி அளவில் கதர் மேம்பாட்டிற்கான பயிற்சி திட்டத்தை தமிழக கதர் வாரியத்தின் ஒப்புதலுடன் ஊராட்சிகள் செயல்படுத்த நடவடிக்கை எடுக்கலாம்.

167. ஊராட்சி அளவில் தறிகளை நவீனப்படுத்துவதற்கான கைத்தறி மற்றும் கதர் துறை அலுவலர்களுடன் கூடிப்பேசி திட்டம் தயாரித்து, அதனை செயல்படுத்தி அவ்வப்போது ஊராட்சிகள் மேற்பார்வையிடலாம்.

168. கிராம ஊராட்சிகள் சம்மந்தப்பட்ட துறையுடன் தொடர்புக் கொண்டு, கிராம புறங்களில் வாழும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு தேனீ வளர்க்கும் பெட்டிகள் வழங்கி அவர்களுடைய வருமானத்தைப் பெருக்கவும் இத்திட்டத்தை மேற்பார்வையும் செய்யலாம்.

169. கிராம ஊராட்சி அளவில் உள்ள கதர் பட்டு நெசவாளர்களுக்கு சம்மந்தப்பட்ட துறையுடன், தொடர்பு கொண்டு ஜெகார்டு பெட்டி வழங்கும் திட்டத்தினை செயல்படுத்தி மேற்பார்வையிடலாம்.

170. வறுமைக்கோட்டிற்கு கீழ் வாழும் மக்களின் வருமானம் உயர்வதற்கு நூற்புக் கதிர் கொண்ட கைராட்டைகளில் கதர் நூற்புக்கான திட்டங்களை வசூலிக்க சம்மந்தப்பட்ட கதர் மற்றும் கைத்தறித்துறை சார்ந்த அலுவலர்களது உதவி பெறலாம்.

171. பனை ஏறும் தொழிலாளர்களுக்கு மரம் ஏறுவதற்கான கருவி வழங்க ஒரு திட்டத்தை செயல்படுத்தி அத்திட்டத்தினை ஊராட்சிகள் மேற்பார்வையிடலாம்.

172. பனை ஏறும் தொழிலாளர்களின் குழந்தைகள் கல்வி கற்பதற்கான புத்தகங்கள், நோட்டுப் புத்தகங்கள், எழுதுப்பொருட்கள் இலவசமாக வழங்கும் திட்டத்தை செயல்படுத்தி மேற்பார்வையிடலாம்.

**ஊராட்சி ஒன்றியங்கள்**

173. பிற முகமைகளின் திட்டங்களை ஒருங்கிணைத்து கதர், ஊரக மற்றும் குடிசைத் தொழில் மற்றும் பிற கைவினைஞர்களுக்கான செயல்பாட்டுத் திட்டத்தை தீட்டுதல் மற்றும் மேற்பார்வையிடுதல்.

174. பல்வேறு உற்பத்தி வணிகம் மற்றும் கைவினை தொழிலில் தொழில் நுட்பவியல் சென்றடையவும் அவற்றை மேம்பாடு செய்யவும் உதவி செய்யலாம்.

175. பொதுவாக பணியிடங்களின் பட்டறை பணிவாளகங்கள் கட்டுவது போன்ற உள்ளமைப்பு வளர்ச்சிக்காக உதவுதல்.

176. ஒன்றிய அளவில் தொழில் துவங்குபவர்களுக்கு கடன் மற்றும் நிதியுதவி பெற ஏற்பாடு செய்தல் மற்றும் ஆய்வு செய்தல்.

177. ஒன்றிய அளவில் உற்பத்தியாகும் கதர் துணி மீதான விற்பனையில் தள்ளுபடி தொகை வழங்கப்பட்டுள்ளதா என்பதை மேற்பார்வையிடல்

178. ஒன்றிய அளவில் கதர் மேம்பாட்டிற்கான புதிய திட்டத்தை வகுத்து அது முறையாக செயல்படுகிறதா என்பதை மேற்பார்வையிடுதல்.

179. ஒன்றிய அளவில் கதர் நெசவுக்கு பயன்படும் தறிகளை நவீனப்படுத்துவதற்கான திட்டங்களை வகுத்து செயல்படுத்தல்.

180. ஒன்றியத்திலுள்ள ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு தேனி வளர்க்கும் பெட்டிகளை வழங்கி அவர்களுடைய வருமானத்தை பெருக்க நடவடிக்கை எடுத்தல்.

181. ஒன்றியத்திலுள்ள பனை ஏறும் தொழிலாளர்களுக்கு பதனீர் எடுக்க தேவையான நவீனகருவிகள் வழங்க ஏற்பாடு செய்தல். அதை வழங்கப்பட்டதா, அதை பயனாளிகள் முறையாக பயன்படுத்துகிறார்களா என்பதை ஊராட்சி ஒன்றியங்கள் மேற்பார்வையிடலாம்.

182. பனை ஏறும் தொழிலாளர்களின் குழந்தைகள், கல்வி கற்பதற்கான புத்தங்கள், நோட்டுப் புத்தகங்கள் மற்றும் எழுதுப் பொருள்கள் இலவசமாக வழங்கி அதை பயனாளிகள் முறையாக பயன்படுத்துகின்றனரா என்பதை மேற்பார்வையிடலாம்.

**மாவட்ட ஊராட்சிகள்**

183. கதர், கைவினைப் பொருள்கள்,பட்டுப்புழு வளர்ப்பு, குடிசை மற்றும் ஊரகத் தொழில் வளர்ச்சிக்காக மாவட்ட நிலையில் திட்டம் தயாரித்தல்.

184. உரிய தொழில் நுட்பவியல் பயிற்சி மையங்களையும்/ நிலையங்களையும் கண்டறிந்து அவ்விவரங்களை ஊராட்சி ஒன்றியங்களுக்கும் ஊராட்சிகளுக்கும் தெரிவித்தல்.

185 மாவட்டத்தில் கிடைக்க கூடிய வளங்களைப் பயன்படுத்துவதற்கு தேவையான உள்ளமைப்புகள் பற்றி கதர் மற்றும் ஊரகத்தொழில் வாரியத்திற்கு ஆலோசனை வழங்குதல்.

186. மாவட்டம் முழுவதற்கான கடன் திட்டத்தின் கீழ் மாவட்டத்திலுள்ளகதர் கைவினைப்பொருட்கள், பட்டுப்புழு வளர்ப்பு குடிசை மற்றும் ஊரகத் தொழிலில் ஈடுபட்டுள்ள பிரிவினருக்கு கடன் வசதி அளிக்க திட்டத்தினை வடிவமைத்தல்.

187. கதர் தறிகளை நவீனப்படுத்தும் திட்டம், தேனீ வளர்க்கும் பெட்டிகளை ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு வழங்கும் திட்டம், கதர் பட்டு நெசவாளர்களுக்கு ஜெகார்டு பெட்டி வழங்கும் திட்டம், பனை ஏறும் தொழிலாளர்களுக்கு இலவச கருவி வழங்கும் திட்டம், மேற்கு தொடர்ச்சி மலைத் திட்டத்தின் கீழ் கிராமத்தொழில் மேம்பாட்டுக்கான திட்டம் மற்றும் நீலகிரியில் தேனி வளர்ப்பு, கிராமத் தொழில் மேம்பாட்டு திட்டம் ஆகிய திட்டங்களை செயல்படுத்த திட்டமிடுதல் மற்றும் ஆலோசனை வழங்குதல்.

(ஆளுநரின் ஆணைப்படி)

**ஜெயந்தி**
அரசு செயலாளர்

திருமதி. ஜெயந்தி இ.ஆ.ப., அரசு செயலாளர், கைத்தறி கைவினைப் பொருட்கள் துணி நூல் மற்றும் கதர் (எப்.இ) துறை சென்னை–9 அவர்களிடமிருந்து கடித எண் 8912/ எப்.2/ 99.1, நாள்.6.9.99, இயக்குநர், ஊரக வளர்ச்சி இயக்ககம், சென்னை – 15க்கு அனுப்பட்ட கடிதத்தின் உண்மை நகல்

---

பொருள் : மூன்றடுக்கு ஊராட்சிகளுக்கு கூடுதல் அதிகாரம் அளித்தல் – உயர்நிலைக்குழு அறிக்கையிலுள்ள பரிந்துரைகள் மீது அரசின் முடிவுகள் – ஆணைகள் வெளியிடுதல் ''9 கதர் கிராம மற்றும் குடிசைத் தொழில்கள்'' தலைப்பில் ஆணை வெளியிடப்படுகிறது.

பார்வை : 1. அரசாணை நிலை எண்.107, கைத்தறி கைவினைப் பொருட்கள் துணி நூல் மற்றும் கதர் (எப் 2) துறை நாள் 7.6.99

2. ஊரக வளர்ச்சித்துறை கடித எண்.33498/சி4/98.5. நாள் 28.6.99 (மற்றும்) 20.8.99

பார்வை ஒன்றிலுள்ள அரசு ஆணையின் தொடர்ச்சியாக (வரிசை எண்.164 முதல் 187 வரை) பார்வையிரண்டிலுள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு, உயர்நிலைக் குழு பரிந்துரைகள் மீது அரசு எடுத்துள்ள முடிவுகள் குறித்த அறிக்கை பகுதி 4ல் ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் மாவட்ட ஊராட்சிகளுக்கு கூடுதல் ஆய்வு, கண்காணிப்பு மற்றும் ஆலோசனை மூலம் வழங்கப்படும் கூடுதல் பொறுப்பு என்ற தலைப்பில் மாவட்ட ஊராட்சிகள் என்ற குறுந்தலைப்பில் ''4ல் கதர் கிராமம் மற்றும் குடிசைத் தொழில் வாரியம்'' வரிசை எண்.646 முதல் 654 வரையிலுள்ள முடிவுகள் குறித்து இணைப்பில் உள்ளவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

தங்கள் உண்மையுள்ள,
**அரசு செயலாளருக்காக**

**இணைப்பு :**

**4. கதர் கிராம மற்றும் குடிசைத் தொழில் வாரியம்**

646. கதர் மேம்பாட்டிற்கான புதிய திட்டம் பற்றி கதர் கிராமத் தொழில் வாரிய உதவி இயக்குநருடன் ஆய்வு செய்யலாம்
647. கதர் நெசவுக்கான தறிகளை நவீனப்படுத்தும் திட்டங்கள் பற்றி கதர் கிராமத் தொழில் வாரிய உதவி இயக்குநருடன் ஆய்வு செய்யலாம்.
648. தேனீ வளர்க்கும் பெட்டிகளை ஆதிதிராவிட பழங்குடியினருக்கு வழங்குதல் (மாநிலத் திட்டம்) பற்றி கதர் கிராமத் தொழில் வாரிய உதவி இயக்குநருடன் ஆய்வு செய்யலாம்.
649. கதர் பட்டு நெசவாளர்களுக்கு ஜகார்டு பெட்டி வழங்குவதற்கான திட்டங்கள் (மாநிலத் திட்டம்) பற்றி கதர் கிராமத் தொழில் வாரிய உதவி இயக்குநருடன் ஆய்வு செய்யலாம்.
650. நூற்புக் கதிர் கொண்ட கைராட்டைகளில் கதர் நூற்புக்கான திட்டங்கள் (மாநிலத் திட்டம்) பற்றி கதர் தொழில் வாரியம் உதவி இயக்குநருடன் ஆய்வு செய்யலாம்.
651. பதநீர் எடுக்கப் பனைமரம் ஏறுவதற்கான கருவி வழங்கும் திட்டம் (மாநிலத் திட்டம்) பற்றி கதர் கிராமத் தொழில் வாரிய உதவி இயக்குநருடன் ஆய்வு செய்யலாம்.
652. படிப்புதவிக் கருவிகளை இலவசமாக வழங்கும் திட்டம் பற்றி கதர் கிராமத் தொழில் வாரிய உதவி இயக்குநருடன் ஆய்வு செய்யலாம்.
653. கதர் பட்டு நெசவாளர்களுக்கு வடிவமைப்பு அட்டைகளையும் பிற உபகரணங்களையும் வழங்குவதற்கான திட்டம் (மாநிலத் திட்டம்) பற்றி கதர் கிராமத் தொழில் வாரிய உதவி இயக்குநருடன் ஆய்வு செய்யலாம்.
654. நீலகிரியில் தேனீ வளர்ப்பு கிராமத் தொழில் மேம்பாட்டுத் திட்டம் (மைய அரசு ஏற்று நடத்தும் திட்டம்) பற்றி கதர் கிராமத் தொழில் வாரிய உதவி இயக்குநருடன் ஆய்வு செய்யலாம்.

**ஜெயந்தி**
அரசு செயலாளர்